IPL

புலமை மையம்

தரம் 05

மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான

விஷேட கருத்தரங்கு - 2023

பகுதி - 01

நேரம் :- 1 மணித்தியாலம்

சுட்டெண் : .....

ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி

0756584350, 0740769151

பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் 03 விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளி
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளி	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீட்டு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	

www.ipledu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "







Contact


76667-4945


தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன

- தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.


01. 


i. 

ii. 

iii. 


02. கீழே தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் ஒன்று வேறுபட்டுள்ளது. அந்த உருவை தெரிவு செய்க.


i. 


ii. 

iii. 


- 3,4 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப்பொருத்தமான உரு எது?

03. 

i. 


ii. 


iii. 

04. 

i. 

ii. 

iii. 

05. 

அருகில் உள்ள உருவில் அவதானிக்க கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?

i. 10 ii. 12 iii. 15

www.ikeguru.lk

06. ஓர் ஆண்டில் 31 நாட்களை கொண்ட மாதங்கள் மட்டும் இடம் பெறுவது

i. மார்ச்,மே,ஜூன் ii. ஜனவரி,செப்டம்பர்,டிசெம்பர் iii. ஜூலை,ஆகஸ்ட்,அக்டோபர்


07.

3	5	2	6
4	6	3	5
4	2	6	1
3	5	2	7


அருகில் தரப்பட்டுள்ள இலக்க உருவில் கீழ் நோக்கியோ அல்லது கிடையாகவோ அடுத்தடுத்து இருக்கும் இரு எண்களின் மொத்தம் 8 ஆக இருக்குமாறு இலக்கங்கள் காணப்படும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை யாது ?

i. 9 ii. 11 iii. 10

08. ஒரு சதுர வடிவத்தாளை எடுத்து உரு A யில் காட்டப்பட்டுள்ளவாறு நடுவில் முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து உரு B யில் காட்டப்பட்டுள்ளவாறு முறிந்த கோடு வழியே வெட்டி அத்தாள் துண்டுகளாக்கப்பட்டுள்ளது.



உரு A



உரு B

கிடைக்கும் துண்டுகள் பற்றிய சரியான கூற்று

i. நான்கு முக்கோணத்துண்டுகள்

ii. ஒரு செவ்வகத் துண்டும் இரு முக்கோண துண்டுகளும்

iii. மூன்று முக்கோண துண்டுகள்

09. உடற்பயிற்சி கண்காட்சி ஒன்றில் இரு ஆண் மாணவர்களுக்கு இடையே இரு பெண் மாணவிகள் என்றவாறு மாணவர்கள் வட்டமாக நின்றனர். இதில் 14 ஆண் மாணவர்கள் நின்றனர். இதன்படி பிழையான கூற்றைத் தெரிவு செய்க


i. ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமனாகும்.


ii. பெண் மாணவிகளின் எண்ணிக்கையை விட ஆண் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகும்.


iii. ஆண் மாணவர்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு எண்ணிக்கையான பெண் மாணவிகள் நின்றனர்.


www.ikedu.lk

10. வித்தியாசமான உருவினை தெரிவு செய்க.

i. 

ii. 

iii. 

11. 

அருகில் உள்ள உருவில் ▭ இவ்வாறான சிறிய சதுரத்தை ஆக்குவதற்கு 16cm நீளமான கம்பித்துண்டு தேவைப்பட்டது. எனவே இந்த முழு வடிவத்தையும் ஆக்குவதற்கு தேவையான கம்பியின் நீளம் யாது ?

i. 96cm ii. 144cm iii. 72cm

12. A தொடக்கம் G வரையான ஆங்கில எழுத்துக்கள் எழுதப்பட்ட அட்டைகளில் கரன் அடுத்தடுத்த எழுத்து வரக்கூடிய நான்கு அட்டைகளை எடுத்தான். எனவே கரன் எடுத்திருக்கக் கூடிய அட்டைகளில் நிச்சயமாக வரக்கூடிய எழுத்து எது?

i. B ii. D iii. F

13. வரிசையொன்றில் பாலனுக்கும் கமலனுக்கும் இடையில் சங்கரும் இன்னும் எட்டு பேரும் நின்றனர். பாலனில் இருந்து சங்கர் 6வதாக நிற்கிறான் எனில் கமலனுக்கும் சங்கருக்கும் இடையில் எத்தனை பேர் காணப்படுவர்?

i. 5 ii. 6 iii. 4

14. சிவப்பு , நீலம் , பச்சை , மஞ்சள் என்ற ஒழுங்கில் 149 கொடிகள் காணப்படுகின்றன. எனில் அவ்வொழுங்கில் நடுவில் வரும் கொடியின் நிறம் எது ?

i. பச்சை ii. மஞ்சள் iii. சிவப்பு

15. மாம்பழம் + அப்பிள் = 60.00 அப்பிள் + கொய்யா = 50.00 கொய்யா + மாம்பழம் = 70.00



எனில் மாம்பழம் + கொய்யா + அப்பிள் = ... புள்ளிக்கோட்டில் வரவேண்டிய பெறுமானம் யாது?

i. ரூபாய்.85.00 ii. ரூபாய்.90.00 iii. ரூபாய்.80.00

www.ipledu.lk

16. கமலனிடம் 5 ரூபாய் நாணயங்களாகவும் 2.00 ரூபாய் நாணயங்களாகவும் 13 நாணயக் குற்றிகள் காணப்பட்டன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபாய்.47.00 எனின் கமலனிடம் காணப்படும் 2.00 ரூபாய் நாணயக் குற்றிகளின் பெறுமதி யாது?

i. 6 ii. 10 iii. 12

17.  **- கிராமம்**  **-மாகாணம்**  **-நாடு**  **-மாவட்டம்**

மேலே தரப்பட்டுள்ள தகவலுக்கமைவாக நிலப்பரப்பின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தி எழுதும் போது கிடைக்கும் சரியான உருத்தொகுதி யாது?

i.  ii.  iii. 

18. 2019ம் ஆண்டில் நடுவில் வரும் தினம் சனிக்கிழமை ஆகும். இதன்படி 2020ம் ஆண்டின் டிசம்பர் 31ம் திகதி என்ன கிழமையாகும் ?

i. ஞாயிற்றுக்கிழமை ii. திங்கட்கிழமை iii. சனிக்கிழமை

19. மேகலா தன்னிடம் இருந்த குறித்த எண்ணிக்கையான பழங்களை ஒரு பிள்ளைக்கு மூன்று வீதம் கொடுத்த போது இரண்டு பழங்கள் எஞ்சியிருந்தன. நான்கு பழங்கள் வீதம் கொடுத்த போது இரண்டு பழங்கள் எஞ்சியிருந்தன. ஐந்து பழங்கள் வீதம் கொடுத்த போது நான்கு பழங்கள் எ ஞ்சியிருந்தன. இதன்படி மேகலாவிடம் காணப்படத்தக்க பழங்களின் எண்ணிக்கை யாது?

i. 48 ii. 56 iii. 74

20. குறியீடு △ ஐ ஒரு தடவையும் குறியீடு □ஐ இரண்டு தடவையும் பயன்படுத்தி எண் 224 எழுதப்பட்டது. 224 உடன் 200ஐ கூட்டும் போது கிடைக்கும் விடையை குறியீட்டினால் எழுதினால்


i. △△△ ii. □△□ iii. △□△

21. ஆறு தையலாளர்கள் ஆறு சட்டைகளைத் தைப்பதற்கு மூன்று மணித்தியாலங்கள் எடுத்தனர். இதன்படி இரண்டு தையல் காரர்கள் இரண்டு சட்டைகளைத் தைப்பதற்கு தேவைப்படும் நேரம்

i. 1 மணித்தியாலம் 30நிமிடம் ii. 3மணித்தியாலம் iii. 1 மணித்தியாலம்

22. போட்டி ஒன்றில் கலந்து கொண்ட எட்டு வீரர்கள் தங்களுக்கிடையேயும் இரு நடுவர்களுடனும் கைகுலுக்கிக் கொண்டனர் எனவே அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்களின் எண்ணிக்கை யாது?

i. 56 ii. 45 iii. 44

23. 

அருகில் உள்ள வரிப்படத்தைக் குறிக்க பொருத்தமான சொற்கூட்டம் எது?

i. பிராணி,மிருகம்,பறவை ஊர்வன ii. தாவரம்,மரம்,செடி,வெண்டி


iii. இலங்கை,ஊவா,பதுளை,மொனராகலை

24. **ரவியை விட முகுந்தன் 3 வருடங்கள் மூத்தவன், முகுந்தனை விட சாந்தன் 3 வருடங்கள் மூத்தவன், ரவியினதும் சாந்தனினதும் வயதுகளின் கூட்டுத்தொகையானது முகுந்தனின் வயதின் இருமடங்காகும் எனும் கூற்று**

i. சரியானது ii. பிழையானது iii. கூறமுடியாது

25. **கமலன் வீட்டிற்கு வந்த போது சூரியன் மேற்குத் திசையில் இருப்பதைக் கண்டான் அப்போது கமலனின் நிழல் அவனது வலது பக்கத்தில் விழுந்தது எனின் கமலன் பயணிக்கும் திசை யாது?**

i. தெற்கு ii. வடக்கு iii. கிழக்கு

26. 

எண்கோலத்தில் வெற்றிடத்தில் வரவேண்டிய எண்யாது ?

i. 6 ii. 8 iii. 11

27. **சாக்கிர் , சப்றி , சிஹான் ஆகிய மூன்று நண்பர்களிடையே வாழை , அன்னாசி , கொய்யா ஆகிய மூன்று பழங்களையும் சப்றிக்கு கொய்யா பழம் கிடைக்காதவாறு ஒன்றுக்கொன்று வேறுபட்ட எத்தனை முறைகளில் பகிர்ந்தளிக்க முடியும் ?**

i. 8 ii. 10 iii. 6

28. **200 தொடக்கம் 400 வரையான எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 2,4 ஆகிய இலங்கங்கள் அடுத்தடுத்து இடம்பெறும் தடவைகள் எத்தனை?**

i. 14 ii. 11 iii. 12

29. **தேவி , ராணி , மாலா , சீலா , கமலினி ஆகியோர் முறையே அடுத்தடுத்ததாக வரக்கூடிய இரட்டை எண் வயதுடையவர்களாக காணப்பட்டனர். ஐந்து பேரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 80 ஆகும். எனின் கமலினி , ராணி ஆகியோரின் வயதுகள் முறையே**

i. 20 , 12 ii. 20 , 14 iii. 16 , 18

www.ipledu.lk

30. தேவியிடமும் ராணியிடமும் சேர்த்து ரூ.750.00 காணப்பட்டது. தேவி தன்னிடம் இருந்த பணத்தில் ரூபாய்.250.00 ஐ ராணியிடம் கொடுத்தாள் இப்போது தேவியிடம் உள்ள பணத்தின் இரு மடங்கு பணம் ராணியிடம் காணப்பட்டது எனின் ஆரம்பத்தில் ராணியிடம் காணப்பட்ட பணம் எவ்வளவு?

i. 250.00 ii. 500.00 iii. 350.00


31. இங்கு A , B , C யிற்கு பொருத்தமான சொற்கள் முறையே

தாவரங்கள்	பறவைகள்	C
செடிகள்	கொக்கு	குதிரை
A	B	சிங்கம்

i. கொடிகள் , கழுகு , எருமை

ii. கத்தரி , முயல் , மான்

iii. கொடிகள் , மயில் , மிருகங்கள்



கீழே தரப்பட்டுள்ள பெரிய சதுரமுகி வடிவான மரக்குற்றியில் A , B ஆகிய இரு பக்கங்களில் மட்டும் சிவப்பு நிற மை பூசப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு 32 , 33ம் வினாக்களுக்கு விடை தருக.

32. பெரிய மரக்குற்றியானது கோடுகள் வழியே வெட்டப்படும் போது பெறப்படும் சிறிய சதுரமுகி வடிவான குற்றிகளின் எண்ணிக்கை யாது ?

i. 48 ii. 81 iii. 64

33. சிறிய சதுரமுகிக் குற்றிகளாக வெட்டி விரிக்கும் போது எந்தவொரு பக்கத்திலும் சிவப்பு நிற மை பூசப்படாத மரக்குற்றிகளின் எண்ணிக்கை யாது ?

i. 32 ii. 36 iii. 28

34. பரீட்சையில் சித்தியடையக் கூடிய பிள்ளையாக இருக்கக் கூடியவர்

i. நேரத்தோடு பாடசாலைக்கு புறப்பட்டுச் செல்லும் பிள்ளை
ii. தனது பாடங்களை கவனமாக படித்து மீட்டிக் கொள்ளும் பிள்ளை
iii. அதிகமான வகுப்புகளுக்கு செல்லும் பிள்ளை

35. யானைக்கு களிறு போல மானுக்கு .....

i. பிணை ii. கலை iii. பறள்

36. உதைப்பந்து சுற்றுத்தொடர் ஒன்றில் 32 கழகங்கள் பங்கு கொண்டன. ஒவ்வொரு போட்டியிலும் தோல்வியடையும் அணி போட்டித் தொடரில் இருந்து வெறியேற்றப்படும் இந்தத் தொடரில் எந்தப் போட்டியும் சமநிலையில் முடிவடைவதில்லை எனின் வெற்றியாளரை தீர்மானிப்பதற்கு குறைந்தது எத்தனை போட்டிகளை நடத்த வேண்டும்.


i. 32 ii. 316 iii. 31

www.ipledu.lk

37. ரமேஷினுடைய வயது ஓர் ஈரிலக்க எண்ணாக உள்ளது. அவனினன் வயதின் இரு இலக்கங்களையும் பெருக்கும் போது 8 விடையாக கிடைக்கும். ரமேஷின் வயதுடன் 18ஐ கூட்டும் பேது விடையாக கிடைக்கும் எண்ணானது ரமேஷின் வயதின் இரு இலக்கங்களையும் மாற்றி எழுதும் போது கிடைக்கும் எண்ணாகும். எனவே ரமேஷின் வயது யாது?

i. 18 ii. 24 iii. 42


38. 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் மூன்று நிலைகள் கிழே தரப்பட்டுள்ளன.



மேலே முகம் தெரியாத பக்க இலக்கத்தின் எதிர்பக்கமாக உள்ள முகத்தின் இலக்கம் யாது?

i. 4 ii. 2 iii. 1

39. கட்டத்தில் உள்ள அதே உருக்களை குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை கொண்ட விடை எது?



i. A , B ii. B , C iii. D , C

- பின்வரும் அட்டவணையை பார்க்க.

	01ம் நிரல்	02ம் நிரல்	03ம் நிரல்
01ம் நிரை	அ	ஆ	இ
02ம் நிரை	ஈ	உ	ஊ
03ம் நிரை	எ	ஏ	ஐ

கீழே தரப்பட்டுள்ள படிமுறை 1யிலும் படிமுறை 2யிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அட்டவணை மாற்றப்படுகிறது. இதனைப் பயன்படுத்தி கீழுள்ள வினாவுக்கு விடை தருக.

படிமுறை 01 : முதலாம் நிரை இருக்கும் இடத்திற்கு 3ம் நிரையையும் மூன்றாம் நிரை இருக்கும் இடத்திற்கு 1ம் நிரையையும் மாற்றல்

படிமுறை 02 : இரண்டாம் நிரல் இருக்கும் இடத்திற்கு 3ம் நிரலையும் மூன்றாம் நிரல் இருக்கும் இடத்திற்கு இரண்டாம் நிரலையும் மாற்றல்

40. மாற்றங்களை செய்த பின்னர் அட்டவணையில் மூன்றாம் நிரையில் காணப்படும் எழுத்துக்களை கொண்ட விடை எது?

i. அ , ஆ . இ ii. எ , ஐ , ஏ iii. அ , இ , ஆ

www.ikeguk

IPL

புலமை மையம்

தரம் 05

மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான

விஷேட கருத்தரங்கு - 2023

பகுதி - 02

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி

0756584350, 0740769151

பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் 03 விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளி
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளி	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீட்டு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	

www.ipledu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

01. கீழ்வரும் பந்தியை துணையாகக் கொண்டு அதன் கீழ் வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நாம் வாழும் சூழலில் உள்ள பொது இடங்கள் யாவும் எமது அன்றாட வாழ்வுடன் தொடர்புடைய நிலையங்கள் ஆகும். இவை அனைத்திலும் சுத்தம் பேணப்படுதல் வேண்டும். குப்பைகளை கண்ட கண்ட இடங்களில் வீசாமல் ஒரு கூடையில் இட்டு அல்லது கிடங்கு ஒன்றில் புதைத்து குப்பை கூளங்களற்ற சுற்றாடல் ஒன்றினை எம்மால் அமைக்க முடியும். கூடைகளில் இட்டு வைக்கின்ற குப்பைகளை உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் சேகரிக்க வரும் போது அவர்களிடம் கையளிக்க வேண்டும். இதன் மூலம் டெங்குகாய்ச்சல் , மலேரியா காய்ச்சல் , யானைக்கால் நோய் போன்ற கொடிய நோய்களைப் பரப்பும் நுளம்புகள் எமது சூழலில் பெருகுவதை தவிர்த்துக் கொள்ளலாம்.

i. நுளம்புகள் மூலம் பரவும் நோய்கள் எவை என பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.
……

ii. குப்பைகளை சேகரித்து யாரிடம் கையளிக்க வேண்டும்.
……

iii. "கூளங்களற்ற" எனும் சொல்லைப் பிரித்தெழுதுக.
……

iv. "பிணி" எனும் சொல்லின் ஒத்தகருத்துச் சொல் யாது?
……

v. பந்தியில் இடம்பெற்றுள்ள அடுக்குத்தொடரை தெரிந்து எழுதுக.
……

vi. குப்பைகளை சரியான முறையில் அகற்றுவதற்கு கூடையிலிட்டு வைக்க முடியும் அதற்கு பதிலாக செய்யக்கூடிய இன்னொரு செயற்பாடு எது என பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.
……

02. பொருத்தமான முடிக்கும் சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ் கோடிடுக.

i. நாம் கைகளை சவர்க்காரமிட்டு…….. (கழுவுவேன் / கழுவுவோம்)

ii. ஐந்து வகுப்பறைகள் பாடசாலையில்…….. (காணப்பட்டன / காணப்பட்டது)

iii. பொலிஸாரை கண்ட திருடர் கூட்டம் ஓட்டம் ……. (பிடித்தனர் / பிடித்தது)

03. தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குக.

i. கொத்தித் / பழங்களை / சுவையான / கிளிகள் / தின்றன
……

ii. இயற்கை / அற்புதமே / அனைத்தும் / அன்னையின் / படைப்பில்
……

சுட்டெண் : .....

04. கீழ்வரும் சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான பழமொழிகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.

i. கமலனின் சிறு வயதுப் பழக்கவழக்கங்களை வைத்து அவனது எதிர்காலத்தை மதிப்பிட முடியும்

.....

ii. அனுபவம் இல்லாத கல்வியால் பயன் கிடைக்காது

.....

05. பின்வரும் தொடர்களால் குறிக்கப்படும் தனிச் சொல்லை எழுதுக.

i. முனிவர்கள் வசிக்கும் இடம் : .....

ii. அனைத்து உடமைகளையும் இழந்தவன் : .....

06. பின்வரும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் எழுதுக.

- சிறுவர்கள் கூட்டமாக நின்று கடற்கரையில் பட்டம் விட்டனர்.

.....

07. கீழ் உள்ள ஒவ்வொரு சொல்லிலும் உள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை புள்ளிக்கோட்டில் எழுதுக.

i. தூரம் : ..... ii. சோகம் : .....

08. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள கருத்திற்கு பொருத்தமான மரபுத் தொடரின் கீழ் கோடிடுக.

i. மகன் பரீட்சையில் சித்தியடைந்ததால் தாய் மிகவும் மகிழ்ந்தாள்.
(காது குத்துதல் / உச்சி குளிர்தல்)

ii. ஆசிரியர் கூறிய அறிவுரைகளை மாணவர்கள் அவதானமாக கேட்டனர்.
(செவிமடுத்தல் / அறைகூவுதல்)

09. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் வெற்றிடத்திற்கு பொருத்தமான எழுவாயை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

i. ..... (இவர் / நாங்கள் / இவர்கள்) சிறந்த கலைஞர்கள் ஆவர்.

ii. ..... (அவை / அது / அவன்) நீரின் அடியில் நீந்தின.

iii. ..... (இவை / அது / அவை) ஓர் அழகிய பூஞ்சோலை ஆகும்.

10. கீழுள்ள பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.

- நாங்க நேத்து கடைக்கு போன


.....

www.ikeou.lk

11. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

i. May I go out ? …… ii. What are these : ……..

12. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை எழுதுக.



This is a ……...


13. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக

- புஸ்தகாலய இதிரியென் : ……

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.


- ஆசிரியை எங்கே ? ……..

15. மூவாயிரத்து அறுநூற்று இருபத்தைந்து எனும் எண்ணில் 235க்கு குறைவான எண்ணை இலக்கங்களில் எழுதுக ……

16. 

கட்டத்தில் உள்ள உரோம எண்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண்ணையும் மிகச் சிறிய எண்ணையும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

பெரிய எண் : …… சிறிய எண் : ……

17. 

உருவில் காட்டப்பட்டுள்ள திண்மத்தில் காணப்படும்

i. **விளிம்புகளின் எண்ணிக்கை யாது ?** ……

ii. **உச்சிகளின் எண்ணிக்கை யாது ?** ……..

18. கமலாவிடம் 48 பூக்கள் காணப்பட்டன. அதில் $\frac{2}{6}$ மல்லிகைப் பூக்களும் $\frac{1}{6}$ ரோசாப் பூக்களும் எஞ்சியவை அலரிப் பூக்கள் ஆகும். கமலாவிடம் காணப்படும் அலரிப்பூக்களின் எண்ணிக்கை யாது? ……

19. i. ஒருவருக்கு ஏழு பந்துகள் வீதம் 200 பந்துகளை எத்தனை பேருக்கு பகிர்ந்தளிக்க முடியும் ……..

ii. அவ்வாறு பகிர்ந்தளித்த பின்னர் எஞ்சியிருக்கும் பந்துகளின் எண்ணிக்கை யாது ?

……

www.ipledu.lk

20. 3m நீளமான கயிற்றுத் துண்டொன்றில் இருந்து 15cm நீளமான 15 துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டன. எனவே எஞ்சியுள்ள கயிற்றுத்துண்டை 25cm நீளமான எத்தனை துண்டுகளாக வெட்ட முடியும் .....

21. தாங்கி ஒன்றின் கொள்ளவு 2700L ஆகும். தாங்கியில் இப்போது $\frac{1}{3}$ நீர் உள்ளது. எனவே தாங்கியை முற்றாக நிரப்புவதற்கு தேவையான நீரின் அளவு யாது?
.....


22. பி.ப. 10.20 யிற்கு பயணத்தை ஆரம்பித்த புகையிரதம் அடுத்த நாள் மு.ப.5.10யிற்கு பயணத்தை முடித்துக் கொண்டது. எனின் புகையிரதம் பயணத்திற்கு செலவிட்ட நேரம் யாது? .....

23. மண்டபம் ஒன்றில் 7 கதிரைகள் வீதம் உள்ள 20 நிரைகளும் 8 கதிரைகள் வீதம் உள்ள 30 நிரைகளும் காணப்பட்டன. குறித்த கதிரைகளை ஒரு நிரையில் 20 கதிரைகள் உள்ளவாறு வைத்தால் எத்தனை நிரைகளில் வைக்க முடியும் ? .....

24. 

அருகில் உள்ள செவ்வகத்தின் நீளங்களின் கூட்டுத்தொகைக்கும் அகலங்களின் கூட்டுத் தொகைக்கும் இடையிலான வித்தியாசம் யாது? .....

25. 20km தூரம் பயணிப்பதற்கு 15 நிமிடங்களை செலவிடும் மிதுரன் ஒன்றரை மணித்தியாலத்தில் பயணிக்கும் தூரம் யாது? .....

26. 
உருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியின் பெறுமானம் 27 எனின்

நிறந்தீட்டப்படாத பகுதியின் பெறுமானம் யாது? .....

27. கமலா கடைக்குச் சென்று ரூபாய் 26.00 பெறுமதியான 6 கொய்யாப்பழங்களையும் ரூபாய் 18.00 பெறுமதியான 9 மாம்பழங்களையும் வாங்கி விட்டு நூறு ரூபாய் பெறுமதியான நான்கு தாள்காசுகளை கடைக்காரரிடம் கொடுத்தாள்

i. கமலா பழங்கள் வாங்க செலவிட்ட பணம் எவ்வளவு ? .....

ii. பழங்களை வாங்கிய பின்னர் அவளுக்கு மீதியாக கிடைக்கும் பணம் எவ்வளவு ?
.....

- நூலகம் ஒன்றில் காணப்பட்ட புத்தகங்களையும் அவற்றின் எண்ணிக்கையையும் கீழே உள்ள அட்டவணை குறித்து நிற்கிறது இதன்படி

புத்தகம்	எண்ணிக்கை
வரலாறு	625
சிறுகதை	574
சிறுவர் முரசு	849

28. சிறுகதைப் புத்தகங்களை விட சிறுவர் முரசு எத்தனை கூடுதலாக காணப்படுகின்றன.

.....

29. நூலகத்தில் காணப்படும் புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....

- **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

30. பண்டைய காலத்தில் நீரைச் சுத்தம் செய்யும் முறைகளில் ஒன்று

i. குளோரின் இடுதல் ii. நீர்வடிகட்டி இயந்திரம் பயன்படுத்தல்
iii. நீரினுள் கரியை இடுதல்

31. காற்றினால் இயங்கும் இசைக்கருவிகளில் ஒன்று

i. வீணை ii. தவில் iii. நாதஸ்வரம்

32. நில்வளகங்கை கடலினுள் கலக்கும் மாவட்டம் எது?

i. மாத்தளை ii. அம்பாந்தோட்டை iii. கொழும்பு

33. இலங்கைக்கே உரித்தான தாவரக் கூட்டத்தை குறிக்கும் விடை

i. கொடபர , கொய்யா , பலா ii. பெரும்பிரம்பு , கெக்கட்டியா , குங்குலிய மரம்
iii. நாகமரம் , தென்னை , தியபர


34. ஒருவர் குறைந்தளவு நீரை அருந்துவதனால் ஏற்படும் பாதிப்புக்களில் ஒன்று அல்லாதது

i. சிறுநீரின் நிறம் கடும் நிறமாக மாறுதல்
ii. தொண்டை , வாய் என்பன உலர்தல்
iii. இலகுவாக சிறுநீர்கழிக்க கூடியதாக இருத்தல்

35. இலங்கையின் தேசிய கொடியில் சிவப்பு நிறத்தால் குறிக்கப்படுவது

i. சிங்கள மக்கள் ii. தேசிய ஒற்றுமை iii. தேசத்தின் மகத்துவம்

36. பின்வரும் கருவிகளுள் முழுமையாக இரும்பை மட்டும் பயன்படுத்தி ஆக்கப்பட்ட கருவி எது?

i. 
ii. 
iii. 

37. இலைக்கஞ்சி தயாரிக்கப்பயன்படாத இலை வகை எது?

i. சிறு நாரத்தை ii. முசு முசுக்கை iii. வேப்பிலை

38. அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய்களை கொண்ட விடை எது?

i. வாந்திபேதி , கல்லீரல் அழற்சி ii. புழுச்சிரங்கு , இரைப்பை அழற்சி
iii. இரைப்பை அழற்சி , கண் நோய்

www.ikedu.lk

39. பின்வருவனவற்றில் பல் வளர்ச்சிக்கு உதவும் போசணைக் கூறு எது?

i. புரதம் ii. கொழுப்பு iii. கல்சியம்

40. ஆமையின் விஷேட திறன்களில் ஒன்று

i. இரையைப் பிடிப்பதற்கு நாக்கில் ஒட்டும் தன்மை காணப்படல்.
ii. பாதுகாப்பிற்காக ஓட்டினுள் புகுந்து கொள்ளல்.
iii. நிலத்தில் பாய்ந்து செல்வதற்கான பாத அமைப்பை கொண்டிருத்தல்.

41. வர்ணச்சக்கரத்தில் காணப்படும் முதன்மை வர்ணங்கள் மூன்றையும் குறிக்கும் விடையாது?

i. மஞ்சள்,நீலம்,சிவப்பு ii. சிவப்பு,பச்சை,மஞ்சள் iii. வெள்ளை,நீலம்,சிவப்பு

42. குப்பைகளை அகற்றும் போது பின்பற்றும் வழிமுறைகள்

i. குப்பைகளை எரித்தல் வேண்டும்
ii. குப்பைகளை வகை வகையாகப் பிரித்து குப்பை கூடைகளில் இடல்
iii. குப்பைகளை தெருக்களில் வீசுதல்

43. பின்வருவோரில் இலங்கையின் முதலாவது பிரதமர் யார் ?

i. 
ii. 
iii. 


44. மாலை வேளையில் வானவில்லைக் காணக்கூடிய திசை யாது?

i. கிழக்கு ii. வடக்கு iii. மேற்கு

45. மழைக்காலங்களில் அதிகம் பெருக்கமடையும் பிராணி எது?

i. கறையான் ii. ஈசல் iii. நுளம்பு

46. பின்வருவனவற்றுள் விவசாயிகளுடன் தொடர்பு இல்லாத உரு எது?

i. 
ii. 
iii. 

47. வெடித்துச் சிதறுதல் மூலம் பரம்பலடையும் வித்து ஒன்று

i. குன்றி மணி ii. ஆடையொட்டி iii. மரமுந்திரி


48. ஒளடத பானம் தயாரிக்க உகந்த பூக்கள்


i. அகத்தி , முருங்கை ii. ஆவரசு , வில்வம் iii. அவரை , முள்முருங்கை

49. ஊர்ந்து செல்லும் பிராணிகளை மட்டும் கொண்ட கூட்டம்

i. பல்லி , பூனை ii. ஆமை , பாம்பு iii. பாம்பு , தவளை

www.ipledu.lk

50. 
A


B

அருகில் உள்ள A ,B ஆகிய இரு உருக்களினாலும் செய்யப்படும் செயற்பாடுகளை முறையே குறிக்கும் விடை யாது?

i. தாள்களை இணைத்தல் , இரும்பினை துளையிடல்.
ii. தாள்களை துளையிடல் , தாள்களை இணைத்தல்.
iii. தாள்களைப் பிணைத்தல், தாள்களை துளையிடல்.

51. வானத்தில் உயரத்தில் பறக்கின்ற கூர்மையான பார்வைத்திறனைக் கொண்ட பறவை எது
i. கழுகு ii. மழைக்குருவி iii. காகம்

52. எளிமையான வாழ்க்கை முறையை கடைபிடிப்பதால் கிடைப்பது எவை?
i. ஓய்வும் மன அமைதியும் கிடைக்கும்
ii. வாழ்க்கை சிக்கல் தன்மை பெறும்.
iii. முரண்பாடான நடத்தைகள் தோன்றும்.

53. தாவரச்சாற்றை உறிஞ்சிக் குடிக்கும் பிராணி
i. பெண் நுளம்பு ii. ஆண் நுளம்பு iii. சிலந்தி

54. பின்வரும் காந்த அமைப்புக்களில் கவரும் தன்மையை குறிப்பது

i. | S | N | | N | S |

ii. | N | S | | N | S |

iii. | N | S | | S | N |

55. விற்றமின் A குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
i. மாலைக்கண் ii. பசியின்மை iii. ஸ்கேவி

56. நெல்லில் இருந்து பதறுகளை வேறாக்குவதற்கு பயன்படுவது
i. அரிதட்டு ii. உரல் iii. சுளகு

57. நீரில் நீந்துவதற்கு ஏற்ற பாத அமைப்பை கொண்ட பிராணி
i. வாத்து ii. காகம் iii. கொக்கு

58. தனது கழிவை தோண்டிப் புதைக்கும் ஆற்றல் கொண்ட பிராணி
i. முயல் ii. பூனை iii. நாய்

59. இலங்கையின் மிகப்பெரிய மாவட்டமும் மிகச்சிறிய மாவட்டமும் முறையே
i. அநுராதபுரம்,கொழும்பு ii. யாழ்ப்பாணம்,அம்பாறை iii. கொழும்பு,குருநாகல்

60. உடற்பயிற்சி ஒரு மனிதனின் ஆரோக்கிய வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும் உடற்பயிற்சி செய்வதனால் நாம் பல்வேறுபட்ட நன்மைகளை அடைகிறோம். "உடற்பயிற்சி செய்வதன் அவசியம்" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாய் அமைந்திருத்தல் வேண்டும்.

.....

.....

.....

www.ikedu.lk